www.Padasalai.Net www.TrbTnpsc.com

No. of Printed Pages : 8

4724106 **7601**

பதிவு எண் MAR2024

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** மற்றும் **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. துன்பப்படுபவர் ________.

(அ) பொருளைக் காக்காதவர் (ஆ) தீக்காயம் பட்டவர்
(இ) நாவைக் காக்காதவர் (ஈ) தீயினால் சுட்டவர்

ச.இராஜ், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர்
அ.செ.அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
களம்பூர்-606903.தி.மலை.மாவட்டம்

2. 'புல்லின் இதழ்கள்' - நூலின் ஆசிரியர் :

(அ) பாப்லோ நெரூடா (ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே
(இ) ரவி வர்மா (ஈ) வால்ட் விட்மன்

3. தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) கடல் + அலை – உயிர் + மெய்
(ஆ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்
(இ) மண் + வளம் – மெய் + மெய்
(ஈ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

[ திருப்புக

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | தஞ்சை பெரிய கோயில் | (i) | திருச்சாழல் |
| (2) | சிங்கன் சிங்கி | (ii) | காலத்தை வென்ற கலை |
| (3) | பெண்கள் விளையாட்டு | (iii) | இசைத் தமிழர் இருவர் |
| (4) | சிம்பொனித் தமிழர் | (iv) | குற்றாலக் குறவஞ்சி |

(அ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)
(ஆ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)
(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)
(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

5. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
(அ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
(ஆ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.
(இ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.
(ஈ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

6. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் :
(அ) ஆகஸ்ட் 9 (ஆ) ஜனவரி 18 (இ) மார்ச் 20 (ஈ) செப்டம்பர் 16

7. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு :
(அ) வினையெச்சம், வினைத்தொகை
(ஆ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி
(இ) பெயரெச்சம், பண்புத்தொகை
(ஈ) வினைத்தொகை, இடவாகுபெயர்

ச.இராஜ், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர்
க.செ.அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
களம்பூர்-606903.தி.மலை.மாவட்டம்

8. கூற்று : ‘‘கோடு’’ என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
(அ) கூற்று தவறு, விளக்கம் சரி
(ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு
(இ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
(ஈ) கூற்றும் சரி, விளக்கமும் சரி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

9. புலி போலப் பாய்ந்தான் - எவ்வகை உவமை ?
(அ) மெய் (ஆ) வினை (இ) உரு (ஈ) பயன்

10. ஓர் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றிப் பாடும் திணை :
(அ) பாடாண் திணை (ஆ) பொதுவியல் திணை
(இ) குறிஞ்சித் திணை (ஈ) வெட்சித் திணை

11. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது :
(அ) கனி முன் நிரை (ஆ) காய் முன் நேர்
(இ) மாமுன் நேர் (ஈ) காய் முன் நிரை

12. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை :
(அ) சிவகாமியின் சரிதம் (ஆ) சிவகாமியின் சபதம்
(இ) பாஞ்சாலி சபதம் (ஈ) இரகசிய வழி

13. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை :
(i) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்
(ii) நேரடிப் பொருள்கள்
(அ) இரண்டும் சரி (ஆ) (i) மட்டும் சரி
(இ) இரண்டும் தவறு (ஈ) (ii) மட்டும் சரி

ச.இராஜ், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர்,
க.செ.அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
களம்பூர்-606903.தி.மலை.மாவட்டம்

14. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் :
(அ) 22 (ஆ) 48 (இ) 18 (ஈ) 24

## பகுதி – II

### பிரிவு - 1

குறிப்பு : **எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக. 3x2=6

15. "வளருங் காவில் முகில் தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்"
- அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன ?

தென்கரைநாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்.

16. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை ?

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவராதல். [ திருப்புக

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. அகநானூறு எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது ? அவை யாவை ?

களிற்றியானை நிரை - 120, மணிமிடைப்பவளம் - 180, நித்திலக்கோவை - 100.

18. ''ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள''

- இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது ?

இவ்வடிகள் ஒழுக்கத்துடனும் பொறுமையுடனும் வாழும் நாவிதழ் புலவனைக் குறிப்பிடுகிறது.

## பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x2=4**

19. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன் ?

20. 'தட்சிண மேரு' – குறிப்பு வரைக.

தஞ்சை பெரிய கோயில் தட்சிண மேரு.
இது ராஜராஜ சோழனால் எந்த நாடு இது ஆண்டுகள் முன்பு கட்டி முடிக்கப்பட்டது

21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது ?

ச. இராஜ், எம்.ஏ., எம்.பில்., ...
முதுகலைத் தமிழாசிரியர்,
சு.செ.அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
களம்பூர்-606903.தி.மலை.மாவட்டம்

## பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **7x2=14**

22. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை ? அவை யாவை ?

24 உயிர் - 12 மெய் - 11, குற்றியலுகர எழுத்து - 01

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) ஈன்ற

(ஆ) முளைத்த

ஈன்ற - ஈன் + ற் + அ
ஈன் - பகுதி
ற் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

முளைத்த - முளை + த் + த் + அ
முளை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) அரும்பொருள்

(ஆ) மணிக்குலம்

அரும்பொருள் - அருமை + பொருள்
ஈறுபோதல்
இனமிகல்

மணிக்குலம் - மணி + குலம்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

25. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

(அ) குயில் கத்த நாய் ஊளையிட்டது.

குயில் கூவ நாய் குரைத்தது.

(ஆ) சோறு சாப்பிட்டு, நீர் பருகினான்.

சோறு உண்டு, நீர் குடித்தான்

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

குரை, குறை

குரைக்கின்ற நாயை குறைத்து மதிப்பிடாதே.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

(அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

(ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

28. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

29. கலவைத் தொடராக மாற்றுக.

மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர், சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.

வைகை அல்லது நஞ்சிருக்கும்

## பகுதி - III

### பிரிவு - 1

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது ?

ச.இராஜ், எம்.ஏ., எம்.பில்., எம்.எட்., பிஎச்.டி.
முதுகலைத் தமிழாசிரியர்,
அ.செ.அரசினர் (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளி
களம்பூர்-606903.தி.மலை.மாவட்டம்

32. 'உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்'

- இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

33. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்

- இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

34. வாய்க்காலின் சிறப்புகளாக மனோன்மணீயம் குறிப்பிடுவன யாவை ?

### பிரிவு - 2

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

36. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை ?

[ திருப்புக

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38. கொற்கை, வஞ்சி, தொண்டி - வளாகம் பற்றி நீவிர் அறிவன யாவை ?
KVT COMPLEX

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடை தருக. **3x4=12**

39. (அ) சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.

**அல்லது**

(ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
உருவக அணி

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

- நாமக்கல் கவிஞர்

ச.இராஜ், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர்.
அ.செ.அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
களம்பூர்-606903. தி.மலை.மாவட்டம்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
(அ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்
(ஆ) வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்

42. 'தா' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரமைத்து எழுதுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**43.** தமிழாக்கம் தருக.

(1) All that glitters is not gold. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

(2) Self help is the best help. தன்கையே தனக்கு உதவி

(3) Tit for Tat. பழிக்குப் பழி

(4) Prevention is better than cure. வருமுன் காப்பதே சிறந்தது.

**செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா :**

'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி.வை. தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகைபுரிந்து, தம் இருபதாவது வயதிலேயே 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தார். 1868 -ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ் கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் உள்ளிட்ட பள்ளிப்பாட நூல்களையும் எழுதினார்.

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு, பி.எல். தேர்விலும் தேர்ச்சி பெற்று, கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884 -ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

ச. இராஜ், எம்.ஏ., எம்.பில்., எம்.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர்
க.செ. அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
சேத்பட்டு - 606903. தி.மலை மாவட்டம்

**வினாக்கள் :**

(i) 'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படுபவர் யார் ?

(ii) 'தினவர்த்தமானி' - என்னும் இதழை நடத்தியவர் யார் ?

(iii) அறிஞர்களின் கவனத்தைக் கவர சி.வை. தாமோதரனார் ஆற்றிய பணி யாது ?

(iv) சி.வை. தாமோதரனார் எந்த ஆண்டு புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார் ?

[ திருப்புக

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **3x6=18**

**44.** (அ) 'காலமறிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) நடராசன் தனி மொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.

**45.** (அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரீகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

**46.** (அ) 'யானை டாக்டர்' – குறும்புதினம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

ச.இராஜ், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர்,
த.செ.அரசினர் (ஆண்கள்) மே.நி.பள்ளி
களம்பூர்-606903. தி.மலை.மாவட்டம்.

## பகுதி - V

குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக. **4+2=6**

**47.** (அ) 'சிற்றூரும் வரப்பெடுத்த ..........'

- எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

(ஆ) 'உலகு' என முடியும் குறள்.

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறும்
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குவியலைப்
போய்எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?
- பாரதிதாசன் -

திருக்குறள்

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. - திருவள்ளுவர்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com